# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, "ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்".

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வணக்கம். கிறிஸ்துவின் நியாயாசனத்தை குறித்து வேதம் என்ன போதிக்கிறதென்று உங்களுக்கு

தெரியுமா? பரலோகத்தில் கண்ணீர் இருக்குமா? இது சுவாரஸ்யமான ஒரு தலைப்பு. நான் என்னுடைய நம்பரோடு நடத்தின உரையாடலை நீங்களும் கேட்க்க விரும்புகிறேன், Dr. எர்வின் லட்சர், சிக்காகோ மூடி திருச்சபையின் தலைமை போதகராக இருக்கிறார், இல்லினோசிஸ். இந்த கேள்வியை அவரிடம் கேட்டன்: ஒரு நபர் கேட்க்கிறார், "நான் ஒரு கிறிஸ்தவன், நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு அதிகப்படியான கொடூர பாவங்களை செய்திருக்கிறேன், அதனுடைய பாதிப்புகளை இன்னும் அனுபவித்து வருகிறேன், என்னை போன்ற ஒருவன் எதிர்காலத்தில் இயேசுவிடம் இருந்து பலனை பெற வாய்ப்பு இருக்கிறதா? அற்புதமான செய்தி என்னன்னா, முடியும். அதை நீங்களும் கேட்கும்படி நான் விரும்புகிறேன், கேளுங்க:

**டாக்டர். எர்வின் லட்சர்:** ஜான், ஒருமுறை, ஆபாச படங்களின் நாயகியா இருந்த ஒருவரிடமிருந்து கடிதம் ஒன்று எனக்கு வந்திருந்தது. அதில அவங்க, "இப்ப, நா ஒரு கிறிஸ்தவள் என்றிருந்தாங்க," இருந்தாலும் அவங்க, "நா செய்த காரியத்தின் தாக்கம் தொடர்ந்து கொண்டேதா இருக்க போகுது, எனக்கு நம்பிக்கை உண்டாக வாய்ப்பு இருக்கான்னு கேட்டாங்க- இரட்சிப்புல இடம் இருக்குதா. ஏற்கனவே அவங்க கிறிஸ்தவராக மாறிவிட்டதால அதுலையே கேள்விக்கான பதில் வந்திடுச்சு, "ஆமா". ஆனா அவங்க கேட்டாங்க, "பரலோகத்துல எனக்கு ஏதாவது பலன் கிடைக்குமா?"

இது, ரொம்பவே சுவாரயமான கேள்வி இங்க ஒரு சில காரியங்களை யோசித்து பார்க்க வேண்டியிருக்குது. முதலாவதாக, இங்க அவங்க இயேசு கிறிஸ்துவிடம் ஒரு பாவியாக வந்து இலவசமாக தனது மன்னிப்பை பெற்றுகொள்கிறார்கள். வேதம் சொல்கிறது நித்திய ஜீவன் என்பது தேவனுடைய ஈவு. கிரியைகளினால் உண்டானதல்ல. ஆனால் இப்ப அவங்க ஒரு கிறிஸ்தவர், இப்ப இயேசு கிறிஸ்துவின் குமாரத்திகளில் ஒருத்தியாக அவர்கள் கருதப்பட்டு மதிப்பிடப்படுவார்கள். இதுல நற்செய்தி என்னன்னு பார்த்தீங்கன்னா, அதற்கான பதில், ஆமாம்" அவங்க இயேசு கிறிஸ்துவிடமிருந்து பலனை பெறுவார்கள். அதுமட்டுமல்ல அவரோடு சேர்ந்து அவர்கள் ஆளுகையும் செய்வார்கள். வரப்போகிற நிகழ்சிகளில் இதை பற்றியும் நாம் பேசிட இருக்கிறோம் - அதாவது கிறிஸ்துவோடு நாம் அனுபவிக்க போகிற ஸ்லாக்கியங்கள் மற்றும் உண்மையுள்ளவர்களுக்கு அவர் வாக்குபண்ணியிருக்கும் வாக்குறுதிகளை பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம்.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுலை, நியாபகம் இருக்குது, சபையை உபத்திரவப்படுத்துபவனாக இருந்தவன் அவனும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக சிறப்பான நிலையை அடைய உழைத்தார். அதற்காகவே அவர் எதிர்பார்ப்போடு இருந்தார். ஓட்டத்தை நேர்த்தியாக ஓடி முடிக்க வேண்டும் என்றிருந்தார். அதனால இதை பற்றி தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை நம்முடைய

இரட்சகராக ஏற்றுகொள்ளும்போது, அது அவருடைய ஈவினால் உண்டாகிறது - கிரியைகளினால் அல்ல. ஆனா அவரை பெற்றுக்கொண்ட பிறகு, வேதம் சொல்கிறது, “நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டுமாம்.” அது என்னை குறித்து பேசுகிறது. ஒரு தனிப்பட்ட கிறிஸ்துவனை பற்றி இங்கு சொல்லப்பட்டு இருக்கிறது, இயேசுவுக்கு முன்னால அவரோட கண்ணை பார்த்து உங்க முழு வாழ்க்கை குறித்து கணக்கு கொடுக்கவேண்டும். உண்மையில், வேதம்  சொல்கிறது, “நாம் அவருக்கு முன்பாக வெளிப்பட வேண்டுமாம் - அவர் முன் தோன்றிடுவோம்.”

சரி, இப்ப கற்பனை செய்து பாருங்க உங்களுடைய பக்கத்து வீட்டை ஒரு சூறாவளி தாக்குகிறது அங்க மறைந்து இருந்த எல்லா விஷயங்களும்,பேஸ்மென்ட் தொடங்கி எல்லா காரியங்களும், திடீருன்னு வெட்ட வெளிச்சமாகிடும். சரி, அப்ப தேவனுடைய பிரசனத்தில் அவருக்கு முன்னால நிக்கிறதா யோசித்து பார்க்கவே பயமா இருக்கும். ஆனா அங்க ஒரு சில காரியங்களை இயேசு கிறிஸ்து அதிக கவனமாக பார்ப்பார் என்பதை உங்களுக்கு சொல்லிட விரும்புகிறேன். அவர் கிருபையுள்ளவர்.

அதாவது என்னன்னா, ஜான், நியாயாசனத்தை குறித்து யோசிக்கும்போது இப்படி துவங்குவது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். சில நிமிடங்கள் அதை பார்க்கலாம், ஒருசில

காரியங்கள் ரொம்பவே முக்கியமானவைகள். முதலாவதாக, எல்லாரும் சரிசமமா நியாயந்தீர்க்கப்படுவோம். சொல்ல போனா, நம்மை நியாயம் விசாரிக்கிறவர் வேற யாருமில்ல நம்முடைய இரட்சகரும் , கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துதான். நம்முடைய சகோதரர், நமக்காக மரித்த அந்த தேவன் தான். ஒன்று மட்டும் நினைவில் இருக்கட்டும் அவருக்கு முன்பாக நிற்கும்போது, அவர் நம் சார்பில் நின்றிடுவார். சிறப்பான பலனை பெற விரும்புகிறார். நாம் போதுமான பலன்களை பெற்று அவரால் சிறப்பான வரவேற்ப்பை பெற்றிடும்படிக்கு அதற்கு அவசியமான தேவையான அனைத்து காரியங்களையும் சாத்தியங்களையும் அவரே செய்திடுவார்.

மேலும், நாம எல்லாரும் முழுமையாக, நேர்த்தியாக, நிதானிக்கப்படுவோம். சரி, நியாயத்தீர்ப்பின்போது நாம இதுவரை செய்த பாவங்களை பார்ப்போமா மாட்டோமா என்ற எண்ணம் அநேகருக்குள் இருக்கிறது அதை குறித்து விளக்கமாக வரப்போகிற நிகழ்சிகளில் நாம் பார்க்க இருக்கிறோம். இப்ப எளிமையா உங்களுக்கு சொல்லி தருகிறேன்: மிகப்பெரிய இழப்பை சந்தித்த சிலரை குறித்து வேதம் கூறுகிறது. அதாவது 1 கொரிந்தியர் மூன்றாம் அதிகாரம். நம்முடைய பாவங்களை நாம் பார்ப்போம் என்றால், நிச்சயமா அவை அனைத்தும் தேவனால் மன்னிக்கப்பட்டதாகவும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மூடப்பட்டதாகவும் காண்பிக்கப்படும். இன்னொரு காரியத்தையும் சொல்கிறேன். இன்றைக்கு நான் வாழ்கிற விதம்தான்

நியாயத்தீர்ப்பில் அதிகப்படியான தாக்கத்தை உண்டாக்க போகிறது. நியாபகமிருக்குதா மரம், வைக்கோல், கல், பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களின் உதாரணம்? இன்றைக்கு நான் வாழ்கிற விதம்தான் நா மரமா இருப்பனா, வைக்கோலா, கல்லா, அல்லது பொன்னா , வெள்ளியா, விலையேறபெற்ற கல்லான்னு நிர்ணயிக்குது. அது அங்க வெளிச்சம்போட்டு காட்டப்படும். இது ஒரு கற்பனைதான், இயேசு கிறிஸ்து உண்மையையும் பொய்யையும் தனித்தனியே வகை பிரித்திடுவார்; உண்மையையும் போலியையும் பிரித்திடுவார். அது எல்லாமே அங்க வெட்ட வெளிச்சமாக காட்டப்படும், வேதம் சொல்கிறது, சிலர் அப்போது மிகப்பெரிய இழப்பை சந்திக்க நேரிடுமாம். இரட்சிக்கப்பட்டு இருப்பாங்க, இருந்தாலும் இழப்பை சந்திக்க நேர்ந்திடும். அதை பற்றி நாம் அடுத்த நிகழ்ச்சியில் விளக்கமா பார்க்கலாம்.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்துவின் நியாயாசனத்தை குறித்த இன்னொரு கேள்வி என்னன்னா, “எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவிடம் இருந்து ஒரே மாதிரியான பலனை பெறுவார்களா? அல்லது கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்னால பத்து நிமிடம் இருந்தா போதும் அதுக்கு பிறகு நித்தியத்தில் என்ன நடந்தாலும் பரவாயில்லை என்கிறீர்களா? அந்த மாதிரி யோசித்திருந்தா இது உங்களுக்கு ஆச்சரியமா இருக்கும், கேளுங்க:

**எர்வின் லட்சர்:** அதாவது,ஜான், நான் நியாயத்தீர்ப்புல என்ன பலன் பெற்றாலும் பரவாயில்ல பத்து நிமிடம் நித்தியத்தில் இருந்தா போதுன்னு சொல்றது சரியில்ல. ஏன்னா நாம் இப்ப இந்த பூமியில் வாழ்கிற விதங்கள் அங்கு சுட்டி காட்டப்படும் இதுதான் நம்முடைய நித்தியத்திர்கான தாக்கத்தை உண்டாக்குகிறது. உண்மைய சொன்னா சிலர் தங்களுடைய உண்மையற்ற நிலையினால இயேசு கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் உரிமையை சந்தர்ப்பத்தை அடையாமல் போகலாம். ஏன்னா  இயேசுவோடு ஆளுகை செய்வதற்கு சில நிபந்தனைகள் இருக்கிறது: “அவரோடு கூட நாம் பாடுபட்டால், அவரோடு கூட நாம் ஆளுகையும் செய்திடுவோம்.” என்று வேதம் சொல்கிறது. நாம் ஜெயம்கொள்ளுகிறவர்களாக இருந்தால், நாம் அவரோடு கூட ஆளுகையும் செய்திடுவோம். இதை பற்றியும் நாம் வரப்போகிற நிகழ்ச்சியில் விளக்கமாக பார்த்திடலாம்.

ஆனா இந்த நியாயத்தீர்ப்பு எவ்வளவு துல்லியமா இருக்க போகுது? ஆல்ரைட், ஒத்துபோக முடியாத இரண்டு கிறிஸ்தவர்களை கற்பனை செய்திடுங்க. ஒருவேளை விவாக ரத்து ஆனவர்களாக இருக்கலாம். அவங்க இரண்டு பேருக்கும் நடுவில என்னென்னவோ விஷயங்கள் பேசப்பட்டு இருக்கலாம். இரண்டு பேருமே விசுவாசிகள் தான். இரண்டு பேரும் பரலோகத்தில் வந்து நிற்க போறாங்க. இப்ப என்ன சொல்ல வர்றோன்னா அவங்க இரண்டுபேரும் பரலோகத்துக்கு வந்ததும், இரண்டு பேரும் நடந்த எல்லாத்தையும் மறந்துட்டு கைகோர்த்து நடக்க

போறாங்களா, எல்லாத்தையும் ஒத்துக்கி வைச்சிட்டு, ஒன்னுமே நடக்காதது போல இருப்பாங்களா? இல்லை! இயேசு கிறிஸ்துன் நியாயாசனமானது இறுதி ஒப்புரவாகுதலின் இடமாக நீதியை நிலைப்படுத்தும் இடமாக இருக்க போகிறது.

அதனாலதான் அப்போஸ்தலனாகிய பவுல் இதை கொரிந்து மக்களுக்கு

> சொல்லியிருக்கிறார்: "ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றையும் குறித்து தீர்ப்பு சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதியங்களின், யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்கு உரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.

இறுதியான தீர்ப்பு சொல்லப்படும் இடம் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம் தான். ஜனங்கள் ஒருவேளை உங்களை குறித்து அதிக கேடான காரியங்களை சொல்லி இருக்கலாம். உங்களை அதிகமாக காயப்படுத்தி இருக்கிரலாம் உங்களால ஒப்புரவு ஆகா முடியாம இருக்கலாம். இதெல்லாம் நியாயாசனத்திற்கு முன்பாக வெளியரங்கமாக்கப்படும் அப்பா தவன் உங்களுக்கு நேர்த்தியான தீர்ப்பை எடுத்து சொல்லுகிறவராக இருக்க போகிறார்.

அதனாலதான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார், "அன்பான சகோதரர்களே, ஒருவருக்கொருவர் பழிவாங்காமல் இருங்கள், "நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நானே பதிற்செய்வேன்."

பொதுவா இதை விசுவாசியல்லாத ஒரு நபரோடு எப்படி நடக்கனுன்னு என்பதாக யோசிப்போம், ஆனா இதை பவுல் விசுவாசிகளுக்கு தான் சொல்லியிருக்கிறார். நித்தியம் முழுவதும் நாம் என்ன சொல்ல போறோம் தெரியுமா அதாவது, "உம்முடைய வழிகள் சத்தியமானவைகள், பரிசுத்தரின் ராஜாவே என்று பாடிடுவோம்." அதனாலதான் மதிப்பிற்குரிய இறையியலாளர் ஜான் முர்ரே இப்படியாக சொல்லியிருக்கிறார், விசுவாசிகளாகிய நமக்கு இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புதான் உண்டாயிருக்க வேண்டும். நாம் அவருடைய கிருபையின் நிறைவை பார்க்கவேண்டும். பாவத்திற்கான இறுதி நியாயத்தீர்ப்பும் இந்த பூமியில் இறுதியாக நடக்கபோகும் ஒப்புரவாகுதளையும் பார்க்க வேண்டும் இருந்தாலும் அது நடப்பதற்கு  முன்பாக பரலோகம் வரும்வரை நாம் காத்திருக்க வேண்டும் என்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்துவுக்கு முன்பாக அவருடைய நியாயாசனத்திற்கு முன் நிற்கும்போது, நம்முடைய கடந்த காலத்தில் எதையாவது மறைக்க முடியுமா? இந்த நியாயாத்தீர்ப்பு என்னுடைய குடும்பத்தினர், என் நண்பர்கள் என் சபை மக்களுக்கு முன்னால நடக்குமா? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** இதை நான் பார்க்கிற விதம் இப்படிதான் இருக்கிறது: அதாவது இயேசு கிறிஸ்து இந்த நியாயாசனத்தை தாக்கப்பட்ட இருவருக்கும் முன்பாக நிறுத்துகிறார். அவர்களுடைய

வாழ்க்கை வெளியரங்கமாகிறது. உண்மையான நிலை வெளியில் கொண்டு வரப்படும். வேதம் சொல்கிறது இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால வாசித்தேனே, மனிதனுடைய இருதயத்தின் யோசனைகளை திட்டங்களை அவர் வெளிபடுத்திடுவார்." அப்போது அங்கு ஒப்புறவாகுதல் உண்டாகும். சரி, எப்படி இருந்தாலும் தனி நபர்கள் ஒருவருக்கு ஒருவர் மன்னிப்பு கேட்டு கொள்வார்கள், அந்த மாதிரி எதையுமே நாம வசனத்தில் பார்ப்பது கிடையாது. ஆனா அப்படி நடக்கலாம் என்று கற்பனை செய்துகொள்ள முடியும். என்ன இருந்தாலும் இறுதியில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகும். இன்றைக்கு நான் பேசிகொண்டிருக்கும் நபர்களை யோசித்து பாருங்க, அதுல நீங்களும் ஒருவராக  இருக்கீங்க, நண்பரே. நீங்க கிறிஸ்தவர்களால் தவறாக நடத்தப்பட்டு இருக்கலாம். கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது உண்மை என்ன என்பது வெளிப்படுவது உறுதி. அதனாலதான் நாம பழிவாங்க எந்த அவசியமும் இல்லை. எல்லா தவறுகளையும் திருத்தனுன்னு நாம் முயற்சிக்க வேண்டிய அவசியமும் இல்லை, அநீதியை நாம சரிபடுத்த வேண்டாம். நம்மால முடிந்ததை நாம செய்திடலாம், ஆனா தேவனால் இதை சிறப்பாக செய்திட முடியும் என்று நமக்கு நல்லா தெரியும். நியாயத்தீர்ப்பு என்ற வார்த்தைக்கான அர்த்தம் இதுதான். அது கிறிஸ்துவின் நியாயாசனமாக இருக்கிறது.

சில நேரங்களில், அதாவது, ஜான், நியாயாசனத்திலிருந்து நியாயத்தீப்பை தங்கள் கரங்களில் எடுத்துகொள்ளும் நபர்களை

பார்க்கும்போது வியந்துபோகிறேன். சரி, இந்த நேரம் நாம நியாயாதிபதிக்கு முன்னால நிற்கிறோம் அப்ப எல்லா காரியங்களும் எல்லாமே அப்படியே வெளிச்சம் போட்டு காட்டப்படுது. பாரபட்சமே இல்லாம இருக்கும். வேதம் சொல்கிறது என்னவென்றால், தேவனிடத்தில் பட்சபாதம் பாரபட்சம் இல்லை." அதாவது, நீங்க ஒருவேளை, "பாஸ்டர்கள் மிஷனரிமார்களின் நிலை என்ன என்றிடலாம் அவங்களுக்கு பிரத்தியேக சலுகைகள் கிடைக்குமா? இல்ல. உண்மைய சொன்னா அவங்களுகுதன அதிகமிருக்கும். வேதம் சொல்கிறது, " அதிக ஆக்கினை உண்டாகாதபடிக்கு உங்களில் அநேகர் போதகராகா திருப்பீர்களாக என்று எழுதியிருகிறது." ஒருவேளை நான் சொல்லலாம், ஜானை போல ஊழியத்தில் இருக்கிற நபர்கள், உங்களைபோல, என்னை போல, இருப்பவங்களுக்கு தேவனுக்கு முன்பாக நிற்கும் போது அதிக பொறுப்புகள் இருக்கிறது என்பது உண்மை. நாம போதிக்கிற விதங்கள் ரொம்ப முக்கியம், நான் வாழ்கிற விதமும் முக்கியம், நாம வாழ்கிற முறை தொடர்ந்து நம்மில் தாக்கத்தை உண்டாக்கும் என்பதை இதுக்கு மேல எப்படி சொல்லி புரிய வைக்கிறது என்று எனக்கு தெரியல.

**ஆன்கர்பெர்க்:** பாரபட்சம் பார்க்கிறது என்று சொல்லும்போது எர்வின் அதுல நிறைய கிறிஸ்தவர்கள் கைதேர்ந்தவர்களா இருக்காங்க. சில ஸ்மார்ட்டான கிறிஸ்தவர்கள் இருக்காங்க. அதோட இந்த பூமியில் அவங்களுக்கு சாதகமா எல்லா நடக்கிற மாதிரி காரியங்களை திருத்தி

அமைக்கும் கிறிஸ்தவர்களும் இருக்காங்க. நம்முடைய நாட்டின் நீதிமன்றங்களை நமக்கு நன்றாக தெரியும், வஞ்சகமான லாயர் இருந்தா உங்களுக்கு விடுதலை. நாம கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, இதையெல்லாம் அவர் குடைந்து வெளியில கொண்டு வந்திடுவார், உண்மை என்னவோ அதை அப்படியே அம்பலப்படுத்திடுவார். அவர் தனக்கு தானே உண்மையுள்ளவராக இருப்பார் என்பதைத்தான் பாரபட்சம் இல்லாதவர் என்கிறோம். ஒன்னு சரின்னா அது சரிதான், இது தப்புன்னா இது தப்புதான். அவரோடு நமக்கு இருக்கிற உறவின் தரத்தை குறித்து நம்மிடத்தில் அவர் கணக்கு கேட்கப்போகிறார். அதை பற்றி சொல்லுங்க.

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், உண்மை இதுதான் நாம இயேசு கிறிஸ்துவுக்கு முன்னால நிற்கும்போது, உண்மையா அவர் நமக்கு ஒரு பொறுப்பை கொடுத்திடுவார் என்று நினைக்கிறன், நமக்கு அங்க சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆனா நாம முன்வரமாட்டோம், ஏன்னா நிஜம் அங்கு வெளிப்படையாக தெரியும். எல்லாவிதமான காரியங்களும் இருக்கும், சத்தியத்தை வளைத்து கொண்டதும், நீங்களும் நானும் எப்படியெல்லாம் மாற்றி மாற்றி நம் சவுகரியத்திற்கு ஏற்றார் போல காரியங்களை நடத்தினோம் என்பதும் வெளிப்படையாக தெரியும், அதை பார்த்ததும் ஒதுங்கிடுவோம் ஏன்னா, எல்லாம் வெட்ட வெளிச்சமா தெரியுது.

அதாவது, ஜியார்ஜ் வைட்பீல்ட் பிரபலமான சுவிசேஷகராக இருந்தார் அவருடைய நாட்களில் அதிகமாக விமர்சிக்கபட்டார் அநேகர் அவருக்கு விரோதமாக குரல் கொடுத்தார்கள். அவருடைய கல்லறையில் என்ன எழுதப்பட்டிருக்க கேட்டு கொண்டார் தெரியுமா - அது அருமையான ஒரு வாக்கு: ஜியார்ஜ் வைட்பீல்ட் வாழ்க்கை எப்படி பட்டது என்று அந்நாளில் விளங்கும் என்று பொறிக்கப்பட்டு இருந்தது." ஜனங்க என்ன நினைக்கிறாங்க என்பது அந்த நாளில் ஒரு பொருட்டாக கருதப்படாது என்று உங்களுக்கு தெரியுமா? அவருக்கு விரோதமாக செய்து தாள்களில் கட்டுரைகள் வெளியாயின, நண்பர்களும் பகைவர்களும், யாருக்கும் எந்த வித்தியாசமுமில்லை. திடீருன்னு, இங்க நிஜங்கள் வெளிவருகிறது ஒரு மனிதனுடைய நிலை, இந்த பெண் எப்படி பட்டவள், என்பது அந்த நாளில் வெளிப்படும். அது முழுக்க முழுக்க வெளிப்படும், பாரபட்சம் இல்லாத நியாயத்தீர்ப்பு.

*****

**ஆன்கர்பெர்க்:** சரி இப்ப இன்னொரு கேள்வி. நான் கிறிஸ்தவனாக இருந்தும் அறிக்கை செய்யப்படாத பாவத்தோடு மரித்தால் என்னவாகும். அந்த பாவங்களை தேவன் முன்னால நிறுத்திடுவாரா? கவனிங்க.

**எர்வின் லட்சர்:** நாம புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் ஒன்று என்னவென்றால், அதற்கு நாம இப்பவே கிறிஸ்துவுக்காக வாழ்வதினால் அந்த நியாயாசனத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திடும்

வேலையில் முழுவீச்சோடு செயல்பட வேண்டியதை உணரவேண்டும்- என்னை நம்புங்க, இய்சு கிறிஸ்து எந்தெந்த காரியங்களை முக்கியப்படுத்தி பார்ப்பார் என்பதை குறித்து தனியா ஒரு நிகழ்ச்சியில் நாம் பேச இருக்கிறோம் அதுல தெரிந்துகொள்ள போகிறோம். அதை மிக தெளிவாக உங்களுக்கு எடுத்து சொல்லி உங்களுடைய சில கேள்விகளுக்கான பத்திகளையும் பார்க்க இருக்கிறோம்.

ஆனா நாம செய்யவேண்டிய இன்னொரு காரியமும் இருக்குது அதாவது கிறிஸ்துவோடு நல்ல ஐக்கியமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் எப்போதும் சாக்குபோக்கு சொல்ல கூடிய மறைவான பாவங்கள் இருக்க கூடாது. இதைதான் பவுல் கொரிந்து மக்களை சொல்லுகிறார், உங்களில் அநேகர் பெயர் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்கள் - அதாவது என்னன்னா, அவங்க எல்லாரும் இயேசு கிறிஸ்துவுக்காக வாழக்கூடிய வளர்ந்த விசுவாசிகளாக காணப்படவில்லை- என்கிறார், உண்மையில், சில தேவனுடைய பந்தியை அசட்டை பண்ணி அபாத்திரமாக போஜனம் பண்ணினதினால் மரித்து போனார்கள். மேலும் அவர் சொல்லுகிறார், “ உங்களை நீங்களே நிதானித்து அறிவீர்களானால் நீங்கள் நியாயந்தீர்க்க பட மாட்டீர்கள்”. விளக்கமாக சொல் பவுலின் வார்த்தைகளை இப்படி சொல்கிறேன்: நாம செய்கிற பாவங்களுக்கு வருந்தி நாம மன்னிப்பு கேட்ப்பதோடு, அதிலிருந்து மனந்திரும்பிநாலும், அதுவும், இறுதியாக நாம மரமா, வைக்கோலா கல்லா என்ற சோதனையில்

சேர்க்கப்படுவதாக காணப்படுகிறது. அதாவது, உங்க இஷ்டப்படி நீங்க வாழ்ந்துட்டு அப்பறம் வந்து நீங்க சகரத்துக்கு முன்னால உங்க பாவங்களுக்காக மன்னிப்பு கேட்பதும் இதனால நியாயாசனத்திற்கு முன்னால தப்பிக்க நினைப்பது கூடாத காரியம். ஆனா அந்த பாவங்கள் நியாயாசனத்திற்கு முன்பாக நம்முடைய நினைவிற்கு கொண்டு வரப்பாடாதது என்று சொல்வதில் தவறு இருக்காது. சரிபடுத்த படாத விஷயங்கள் தான் நியாயாசனத்திற்கு முன்பாக நியாயந்தீர்க்கபடும் படி கொண்டு வரப்படும். அதனால தான் பவுல் சொல்கிறார், "நாம் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு நம்மை நாமே நிதானித்து பார்க்க கடவோம்."

அதனால உங்களை இன்றைக்கு உற்சாகப்படுத்துகிறேன், என்னை உற்சாகப்படுத்தி கொள்ளுகிறேன், தேவனிடத்தில் சொல்லுங்க, "ஆண்டவரே, என்னுடைய வாழ்வில் உமக்கு பிரியமில்லாத வழிகள் ஏதாவது இருக்கிறதா? அதிலிருந்து விலகி நாம் விசுவாசத்தோடு மனந்திரும்புதலோடு இருக்கவும் நீர் என்னை பார்த்து நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என்று சொல்வதை கேட்கும்படி செய்திடும் என்றிடுங்கள்.

**ஆன்கர்பெர்க்:** இப்ப சொன்ன காரியங்களை எல்லாம் நீங்க கவனமாக கேட்டுக்கொண்டு இருக்கும்போது, உங்களுக்கு சில கேள்விகள் எழும்பலாம்: ஜான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவுக்கு முன்பாக நின்று தங்கள் வாழ்நாளில் ஒவ்வொரு

பகுதிகளையும் கடந்து பார்க்கும்போது அந்த நேரம் எப்படி இருக்கும்? உங்களுடைய கேள்வி இதுவாக இருக்குமானால் உங்களை ஊக்குவிக்கும் சில காரியங்கள் உங்களுக்காக . இதை நீங்கள் கேட்கும்படி விரும்புகிறேன்.

**எர்வின் லட்சர்:** சரி, உண்மையில், நா இன்றைக்கு குறிப்பிட்டு யாருக்காகவாவது நேரடியா பேசுவது போல இருக்கலாம், “வாவ்! இதை எப்படி எங்களால தாங்க முடியும், இயேசு கிறிஸ்துவுக்கு முன்னால நிர்க்கனுமா என்கிறீர்களா! இதுதான் உண்மை புரிந்துகொள்ளுங்கள்! சரி, இன்னொரு விஷயத்தை நீங்க தெரிந்துகொள்ள விரும்புகிறேன் நாம கிருபையாக நியாயன்தீர்க்கப்டுவோம். நினைவிருக்கட்டும் - ஏற்கனவே சொல்லியிருக்கேன் ஆனா அதை திரும்பவும் சொல்றேன் - நம்மை நியாயந்தீர்க்கிற நபர் நம்மை நேசித்து நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தவராக இருக்கிறார். நீங்க கேட்கலாம், “சரி, நான் அவருக்கு முன்பாக நிற்கும்போது இயேசு கிறிஸ்து என்மீது கோபப்படுவாரா? இதுல கோபத்திற்கு இடமிருக்குதான்னு தெரியல, ஆனா அவருக்கு பிரியமில்லாத நிலை என்று இருக்கலாம்.

உதாரணமா, இப்படி வைத்துகொள்வோம் ஒரு தகப்பன் தன்னுடைய மகன்கிட்ட சொல்றாரு, “இங்க பாரு, பத்து வாரம் தொடர்ந்து புல்லை நல்லா பத்தபடுத்தி வைச்சீன்னா, உன்ன நா விமானத்துல கூட்டீட்டு போறன்னு சொல்றார்.” அப்பா ஒரு பைலட். இந்த மாதிரி ஒரு வாக்குறிதியை கொடுக்கிறார். முதல் முறை அந்த மகன் புல்

வேலியை சமப்படுத்டுகிறான். இரண்டாவது முறையிம் செய்கிறான். மூன்றாவது நான்காவது முறை முழுமையாக முடிக்காம விட்டுவிடுகிறான். ஐந்தாவது ஆறாவது முறைகளில் முழுசா செய்யாமையே விட்டர்றான். இப்ப இறுதியா அந்த பையன் அப்பாகிட்ட வந்து பேசுவதற்கான நேரம் வந்திடுச்சு அவனும் அப்பாட்ட வந்து சொல்றான், “உங்களோட விமானத்துல நானும் இப்ப பறக்க வரப்போகிறேன்  சரியா? இதுக்கு அப்பா என்ன பதில் சொல்வார்? அவன் மகன்கிட்ட கோபப்படுவாரா? அந்த பையனை அவர் கடிந்திடுவாரா? இல. ஆனால் அப்பா அவனுடைய செய்கையில் பிரியப்படவில்லை அதனால் என்ன சொல்வாருன்னு, “இல்ல, உன்னால போக முடியாது ஏன்னா நீ உண்மையா இல்லை என்பார்.”

இந்த நேரத்துல நானும் ஒன்றை யோசித்து பார்க்கிறேன் இயேசுவுக்கு முன்னால நிறுக்கும்போது, நாமும் உண்மையில்லாம இருந்தா அவர் நம்மை பார்த்தும் இப்படிதான் சொல்வாரோ. அதாவது, ஜான், தொலைகாட்சியில் ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியை பார்த்தான் நீங்களும் அதை பார்த்திடுப்பீங்க. அதாவது டையேன் சாயர் பில்லி கிரஹாம்கிட்ட ஒரு கேள்வி கேட்டாங்க, “உங்களை எந்த விஷயத்தில் நியாபகப்படுத்தி கொள்ள விரும்புகிறீர்கள்? பில்லி இதுக்கு நேரடியான பதிலை சொல்லவில்லை. அதுக்கு வேறவிதமா பதில் சொன்னார். அவளை அவர் பார்த்ததும் அவருடைய முகத்தில் ஒரு சோகமான நிலை உண்டானது அப்போது அவர் சொன்னார், “எனக்கு என்ன

பிடிக்குன்னா தேவன் என்னை முகமுகமாய் பார்த்து, "நல்லது, உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என்று சொல்வதுதான்' ஆனா அப்படி நடக்குமான்னு தெரியலன்னு சொன்னார்." வாவ்! அதை பார்த்ததும் இரண்டு காரியங்கள் உடனே என்னோட நினைவிற்கு வந்தது.

முதலாவது, "பில்லி, நீங்க இருக்க வேண்டிய நிலையை விட இப்ப ரொம்பவே தாழ்மையாக இருக்கிறீங்க. அதாவது,நீங்க பல கோடி மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்து இருக்கீங்க." இரண்டாது என்னுடைய நினைவிற்கு உடனடியான தோன்றிய எண்ணம் என்னன்னா, பில்லி கிரகாமே இது உண்மையில் சாத்தியமாகுமா என்று யோசித்தால் அதாவது, "நல்லது என்ற வார்த்தை அவருக்கு கிடைக்குமான்னு தெரியலைன்னு சொன்ன நீங்களும் நானும் என்னாவோம்? இந்த எண்ணம் தான் எனக்கு வந்தது. ஆனா நான் இன்றைக்கு உங்களுக்கு சொல்லுகிறேன் பிரியமானவர்களே. இதில் Mr. கிரஹாம் சொன்னது நூற்றிற்கு நூறு உண்மைதான். அவர் பிரபலமானவர் என்பது உண்மைதான். அவர் கோடிக்கணக்கான மகளும் சுவிசேஷத்தை பிரசங்கித்திருப்பதும் உண்மைதான் ஆன இது அவசியமான ஒன்றாக காணப்படுவது இல்லை. இதெல்லாம் தேவன் அவருக்கு கொடுத்த தாலந்துகள். சொல்லபோனா இன்றைக்கு பேங்க் ஊழியனை போல, தொழிற்சாலை ஊழியனை போல, விவசாயியை போல, உரிமையாளர் போல, கிறிஸ்துவினால் பலன் கொடுக்கக்கூடிய

ஏதாவது ஒரு நிலையில் இருக்கிறோம் ஏன்னா நம்முடைய நேரம் தாலந்து பொக்கிஷத்தை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதின் அடிப்படையில் தான் நாம் நமது பலனை பெற்றுக்கொள்ள இருக்கிறோம்.

மேலும் நாம் வாழ்கிற ஒவ்வொரு நாளும் நாம் யார் என்பதை நிர்ணயிக்கிறது பொன், வெள்ளி விலையேறபெற்ற கற்களால் கட்டப்படுகிரோமா அல்லது மரம் வைக்கோல் கல்லா. மேலும் இறுதியில் முடிவில், அவை அக்கினியினால் சோதிக்கப்படும் அது புடமிடப்படும்போது ஒருவேளை அது சுத்த பொன்னாக ஒரு தங்ககட்டியாக மாறக்கூடும். அதனாலதான் சிலர் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வரும்போது அவங்களை பத்தி நாம ஒன்னுமே கேள்வி படாதவர்களாக இருந்தாலும் அவங்க அங்க சிறப்பாக புகழ்ச்சியை பெற்றுவதை கண்டு அறிந்துகொள்ள போகிறோம். ஒருமுறை என்னுடைய நண்பனிடம் சொன்னேன், அதாவது, “நிச்சயமா, உன்ன பரலோகத்துல பார்ப்பேன்னு எனக்கு தோனல! அவனுக்கு அதிர்ச்சியா இருந்தது. அவன் நிறைய உபத்திரவங்களை கடந்து வந்திருக்கிறான் - அதை பற்றியெல்லாம் உங்களுக்கு சொல்ல மாட்டான் - ஆனா அவன் உண்மையாக இருந்தான். அதனால அவனிடம், “இங்க பாரு, அது காரணம் என்னன்னா நீ இயேசுவுக்கு ரொம்ப பக்கத்துல இருப்ப ஆனா ரொம்ப

தூரமா இருப்பேன் நம்மால ஒருவரை ஒருவர் பார்க்க முடியுமான்னு தெரியல என்று சொன்னேன்.” ஆமா, உண்மையில், நா கிண்டலாக பேசினது போல இருந்தாலும் இதுல ஒரு உண்மை இருக்கு அதாவது கிறிஸ்து அவர்கள் மீது வைத்திற்கும் பாதையை உபத்திரவத்தை பொறுமையோடு சகித்து அதில் உண்மையுள்ளாவர்களாக இருப்பவர்கள், அங்க சிறந்த பலனை அடைவார்கள். அதனால வைட்பீல்ட் சொன்ன வார்த்தைகளை யோசித்து பாருங்க அது பில்லி கிரஹாமுக்கும், உங்களுக்கு எனக்கும் பொருந்துவதாக தான் இருக்கிறது, “வைட்பீல்ட் எப்படிப்பட்ட மனிதன் என்பது அந்த நாளில் விளங்கப்படும்.” என்னவொரு நாள். நேருக்கு நேர். இயேசுவும் நீங்களும் மட்டும் இதுதான் உண்மையாக இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஒருவேளை நீங்க தனியா தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டியிருக்கும் என்பதை இப்போது புரிந்திருக்கலாம், இதெல்லாம் பார்க்கும்போது பரலோகம் போவேனா என்ற எண்ணம் கூட வந்திடலாம். அதற்கு காரணம் ஒருவேளை நீங்க இதுவரை இயேசு கிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்காம இருந்திருக்கலாம். அல்லது ஒருநாள் நீங்க இயேசுவை விசுவாசித்து ஏற்றுகொண்டிருக்கலாம் ஆனா அவருக்காக வாழலையே என்ற வருத்தம் உங்களுக்கு இருக்கலாம். கிறிஸ்தவராக இருந்தும் உங்க வாழ்க்கையில் அநேக பாவங்கள் இருக்கலாம். இதுல எது உண்மையாக இருந்தாலும் சரி.

அடுத்த பகுதியை நீங்க அதிக கவனத்தோட கேட்க்கும்படியாக விரும்புகிறேன்.

**எர்வின் லட்சர்:** ஜான் இன்றைக்கு நாம இரண்டு விதமான மக்களோடு பேசிக்கொண்டு இருக்கிறோம் என்று உறுதியாக சொல்ல முடியும். உண்மையில், முழு உலகமும் இரண்டு வகையாக பிரிக்க கூடியதாக இருக்கிறது. இதில் இதுவரை கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளாத மக்களும் இருக்கிறார்கள். தேவன் இன்னும் அவர்கள் பிதாவாகவில்லை. நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவரை விசுவாசிக்க வேண்டும் இது இலவசமான ஒரு ஈவு. இன்றைக்கு நீங்கள் ஒன்றை அறிந்துகொள்ள விரும்புகிறேன் நீங்க எப்பேர்பட்ட ஆளா இருந்தாலும் சரி நீங்க இயேசு கிறிஸ்துவிடம் வந்து அவருடைய மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும், சுத்திகரிப்பை பெற்றிடுங்கள், தேவனுடைய குடும்பத்தில் நீங்களும் ஒரு அங்கமாக மாறிட முடியும். இன்னொரு கூட்டத்தினர், அது, நமக்கே தெரியும், அவங்கள பத்தியும் பாத்தோம், தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள், இவர்கள் எல்லாரும் விசுவாசிக்கும் கூட்டத்தினர். மேலும் நாம இதுவரை இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தை குறித்து பேசி கொண்டு இருந்ததால, இந்த உண்மையானது நமக்கு நினைவு படுத்தப்பட்டு இருக்கிறது, ஆதாவது, நாம தேவனுக்கு முன்பாக நிற்கவேண்டும். நாம பரலோகத்திற்குள் செல்கிறோமா இல்லையா என்பது இங்க கேள்வியே இல்ல ஏன்னா இது கிரியைகளினால்

உண்டாகிற ஒன்றல்ல. எதை கவனிக்கனுன்னா பரலோகத்துல நம்முடைய உத்தமத்திர்கான பலனை நாம பெற முடியுமா. அதனால இந்த நமது மனதில் பதித்துகொள்வோம் மேலும் இன்றைக்கு உங்களை உற்சாகப்படுத்துகிறேன், இதுவரை இயேசுவை விசுவாசிக்காமல் இருப்பீர்கள் என்றால், இப்போது முன்வந்திடுங்கள். எளிமையாக அவருடைய மன்னிப்பையும் அன்பையும் பெற்றுகொள்ளுங்கள். அவரை உங்கள இரட்சகராக ஏற்றுகொண்டால், உங்களுடைய வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணித்தவர்களாக வாழ முன்வந்திடுங்கள், அவர் உங்களுக்கு கொடுக்கும் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாக இருங்கள், அதினால் நீங்க அவரை பார்க்கும்போது அவர் உங்களை பார்த்து, “நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே என்றிடுவார்.”

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.